

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்


தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு



جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள் 1

اَللّٰهُمَّ اهْدِنِيْ وَسَدِّدْنِيْ

அல்லாஹும் மஹ்தினீ வஸத்தித்னீ

இறைவா எனக்கு நல்வழி காட்டுவாயாக!

நேர்மையானதை சரியாகச் செய்ய எனக்கு வாய்ப்பளிப்பாயாக!

அறிவிப்பவர்: அலி (ரலி)அவர்கள், முஸ்லிம் 7086

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள் 2

## தொழுகையில் ஸலாம் கொடுக்கும் முன் ஓத வேண்டிய துஆ

اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ
وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ

அல்லாஹும்ம அஇன்னீ
அலா திக்ரிக வஷுக்ரிக ,
வஹுஸ்னி இபாததிக

யா அல்லாஹ்! நான் உன்னை நினைவு கூறுவதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும் எனக்கு அருள் புரிவாயாக !

அறிவிப்பாளர்: ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள், நஸாயீ 1350

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

3

يَا مُقَلِّبَ الْقُلُوبِ
ثَبِّتْ قَلْبِيْ عَلَى دِيْنِكَ

யா முகல்லிபல் குலூபி த(ثَ)ப்பித் கல்பி அலா தீனிக்.

உள்ளங்களை புரட்டுபவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதியாக ஆக்குவாயாக.

அறிவிப்பவர்: உம்மு ஸலமா (ரலி)அவர்கள், திர்மிதி 3522

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

4

اَللّٰهُمَّ آتِ نَفْسِي تَقْوَاهَا، وَزَكِّهَا أَنْتَ خَيْرُ مَنْ زَكَّاهَا، أَنْتَ وَلِيُّهَا وَمَوْلَاهَا،

அல்லாஹும்ம ஆத்தி நப்( ف )ஸீ தக்வாஹா,
வ ஸ( ز )க்கிஹா, அந்த கை( خ )ரு மன்
ஸ( ز )க்காஹா, அந்த வலிய்யுஹா வ மவ்லாஹா.

இறைவா! எனது உள்ளத்தில் உன்னைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி, அதைத் தூய்மைப்படுத்துவாயாக! அதைத் தூய்மைப்படுத்துவோரில் நீயே சிறந்தவன். நீயே அதன் உரிமையாளன்; அதன் காவலன்.

அறிவிப்பவர்: ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5266

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

5

اَللّٰهُمَّ مُصَرِّفَ الْقُلُوْبِ صَرِّفْ قُلُوْبَنَا عَلَى طَاعَتِكَ

அல்லாஹும்ம முஸர்ரிப(ஃ) குலூபி ஸர்ரிப்(ஃ) குலூபனா அலா தாஅதிக

இறைவா உள்ளங்களைத் திருப்புகின்றவனே! எங்கள் உள்ளங்களை உனக்குக் கீழ்ப்படிவதற்குத் திருப்புவாயாக!

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ரு (ரலி) அவர்கள், முஸ்லிம் 2654.

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

6

اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْهُدٰى
وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் ஹுதா, வத்துகா, வல் அ(ف)பா(ف)ப வல் (غ)கினா

இறைவா ! உன்னிடம் நான் நேர்வழியையும், இறையச்சத்தையும், சுயகட்டுப்பாட்டையும், தன்னிறைவையும் வேண்டுகிறேன்.

முஸ்லிம் 5265

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

7

اَللّٰهُمَّ لَكَ أَسْلَمْتُ، وَبِكَ آمَنْتُ، وَعَلَيْكَ تَوَكَّلْتُ،
وإِلَيْكَ أَنَبْتُ، وَبِكَ خَاصَمْتُ، اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِعِزَّتِكَ،
لَا إِلٰهَ إِلَّا أَنْتَ، أَنْ تُضِلَّنِيْ، أَنْتَ الْحَيُّ الَّذِيْ لَا يَمُوْتُ، وَالْجِنُّ وَالْإِنْسُ يَمُوْتُوْنَ

**அல்லாஹும்ம லக அஸ்லம்து, வ பிக ஆமன்து, வ அலைக தவக்கல்து, வ இலைக அனப்து, வ பிக கா(خ)ஸம்து, அல்லாஹும்ம இன்னி அஊது பி இஸ்(ز)ஸ(த்)திக, லாயிலாஹ இல்லா அன்த, அன் துளி(ض)ல்லனீ, அன்தல் ஹய்யுல்லதி லா யமூது, வல்ஜின்னு வல்இன்ஸு யமூதூன்**

இறைவா! உனக்கே அடிபணிந்தேன். உன்மீதே நம்பிக்கை கொண்டுள்ளேன். உன்னையே சார்ந்துள்ளேன். உன்னிடமேதிரும்புகிறேன். உன் உதவியாலேயே (எதிரிகளிடம்) வழக்காடுவேன். இறைவா! நான் வழிதவறாமலிருக்க உனது கண்ணியத்தின் மூலம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். உன்னைத் தவிர வேறு இறைவனில்லை. ஜின் இனத்தாரும் மனித குலத்தாரும் இறந்துவிடுவார்கள்; ஆனால் நீ இறக்காமல் நிலைத்திருப்பவன்

**அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5261**

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

8

اَللّٰهُمَّ أَصْلِحْ لِي دِينِي الَّذِي هُوَ عِصْمَةُ أَمْرِي،
وَأَصْلِحْ لِي دُنْيَايَ الَّتِي فِيهَا مَعَاشِي،
وَأَصْلِحْ لِي آخِرَتِي الَّتِي فِيهَا مَعَادِي،
وَاجْعَلِ الْحَيَاةَ زِيَادَةً لِي فِي كُلِّ خَيْرٍ،
وَاجْعَلِ الْمَوْتَ رَاحَةً لِي مِنْ كُلِّ شَرٍّ

அல்லாஹும்ம அஸ்லிஹ்லி தீனி அல்லதி ஹுவ இஸ்மது அம்ரி.
வ அஸ்லிஹ்லி துன்யா அல்லதி பீ(ف)ஹா மஆஷீ.
வ அஸ்லிஹ்லி ஆகி(خ)ரத்தி அல்லதி பீ(ف)ஹா மஆதீ.
வஜ்அலில் ஹயாத்த ஸி(ز)யாததல்லி ஃபீ குல்லி கை(خ)ர்.
வஜ்அலில் மவ்த ராஹத்தல்லி மின் குல்லி ஷர்.

இறைவா! எனது காரியத்திற்கு பாதுகாப்பாக உள்ள எனது மார்க்கத்தை எனக்குச் சீர்படுத்துவாயாக! நான் வாழ வேண்டிய இம்மையை எனக்குச் சீர்படுத்துவாயாக! நான் திரும்பி வரவுள்ள மறுமையை எனக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எனக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எனக்குக் காரணமாக்குவாயாக!)

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)அவர்கள், முஸ்லிம் 2720

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

9

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا
قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

ரப்பனா ஹப்லனா மின் அஸ்(ز)வாஜினா
வ துர்ரிய்யாத்தினா குர்ரத்த அஃயுனி(வ்)
வஜ் அல்னா லில் முத்தகீன இமாமா

எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தி உடையவர்களுக்கு எங்களை இமாமாக ஆக்கியருள்வாயாக !

திருக்குர்ஆன் 25:74

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

10

رَبِّ اَوۡزِعۡنِىۡۤ اَنۡ اَشۡكُرَ نِعۡمَتَكَ الَّتِىۡۤ اَنۡعَمۡتَ عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ وَاَنۡ اَعۡمَلَ صَالِحًا تَرۡضٰٮهُ وَاَصۡلِحۡ لِىۡ فِىۡ ذُرِّيَّتِىۡ ‌ؕۚ اِنِّىۡ تُبۡتُ اِلَيۡكَ وَاِنِّىۡ مِنَ الۡمُسۡلِمِيۡنَ

ரப்பி அவ்ஸ்(ز)ஃனீ அன் அஷ்குர நிஃமதகல்லதீ அன் அம்த
அலய்ய வ வஅலா வாலிதய்ய வ அன் அஃமல ஸாலிஹன்
தர்ழா(ض)ஹு வ அஸ்லிஹ்லீ ஃபீ துர்ரிய(த்)தீ இன்னீ
துப்து இலைக்க வ இன்னீ மினல் முஸ்லிமீன்.

இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த நிஃமதுக்காக, (அருள் கொடைகளுக்காக) நன்றி செலுத்தவும், உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய ஸாலிஹான நல்ல அமல்களைச் செய்யவும் எனக்கு அருள் பாலிப்பாயாக! என்னுடைய சந்ததியையும் ஸாலிஹானவர்களாக சீர்பத்தியருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன்; அன்றியும், நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவனாக இருக்கின்றேன்"

திருக்குர்ஆன் 46:15

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

11

## எறும்புகளின் உரையாடலைக் கேட்ட போது சுலைமான்(அலை) அவர்களின் துஆ

رَبِّ اَوۡزِعۡنِىۡۤ اَنۡ اَشۡكُرَ نِعۡمَتَكَ الَّتِىۡۤ اَنۡعَمۡتَ
عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ وَاَنۡ اَعۡمَلَ صَالِحًا تَرۡضٰٮهُ
وَاَدۡخِلۡنِىۡ بِرَحۡمَتِكَ فِىۡ عِبَادِكَ الصّٰلِحِيۡنَ

ரப்பி அவ்ஸி(ز)ஃனீ அன் அஷ்குர நிஃமதகல்லதீ அன்அம்த அலய்ய வஅலா வாலிதய்ய வஅன் அஃமல ஸா(ص)லிஹன் தர்ளா(ض)ஹு வஅத்ஹில்னி பிரஹ்மதிக ஃபீ இபாதிகஸ் ஸா(ص)லிஹீன்

என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!

திருக்குர்ஆன் 27:19

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

12-A

اللّٰهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُورًا وَفِي بَصَرِي نُورًا وَفِي سَمْعِي نُورًا وَعَنْ يَمِينِي نُورًا وَعَنْ يَسَارِي نُورًا وَفَوْقِي نُورًا وَتَحْتِي نُورًا وَأَمَامِي نُورًا وَخَلْفِي نُورًا وَاجْعَلْ لِي نُورًا

அல்லாஹும்மஜ்அல் பீ(ف) கல்பீ நூரா, வபீ(ف) பஸ(ص)ரீ நூரா, வபீ(ف) ஸம்ஈ நூரா, வஅன்ய் யமீனீ நூரா, வஅன்ய் யஸாரீ நூரா, வப(ف)வ்கீ நூரா, வதஹ்தீ நூரா, வஅமாமீ நூரா, வக(خ)ல்பீ(ف) நூரா, வஜ்அல்லீ நூரா

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6316

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

12-B

இறைவா! என் இதயத்தில் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! என் பார்வையிலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! என் செவியிலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! என் வலப் பக்கத்திலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! என் இடப்பக்கத்திலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! எனக்கு மேலேயும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! எனக்கு முன்னாலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! எனக்குப் பின்னாலும் ஒளியை
ஏற்படுத்துவாயாக ! எனக்கு (எல்லாத் திசையிலும்
ஒளியை ஏற்படுத்துவாயாக !

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6316

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

13-A

اللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَإِسْرَافِيلَ فَاطِرَ السَّمَوَاتِ وَالأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ تَحْكُمُ بَيْنَ عِبَادِكَ فِيمَا كَانُوا فِيهِ يَخْتَلِفُونَ اهْدِنِي لِمَا اخْتُلِفَ فِيهِ مِنَ الْحَقِّ بِإِذْنِكَ إِنَّكَ تَهْدِي مَنْ تَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல, வமீகாயீல, வஇஸ்ராபீ(ف)ல, பா(ف)திரஸ் ஸமாவா(த்)தி வல் அர்ழி(ض) ஆலிமல் க(خ)ய்பி வஷ்ஷஹாததி அன்த தஹ்குமு பைன இபாதிக பீ(ف)மா கானு பீ(ف)ஹி யக்(خ)தலீபூ(ف)ன, இஹ்தினீ லிமக்(خ)துலிப(ف) பீ(ف)ஹி மினல் ஹக்கி பிஇத்னிக இன்னக தஹ்தீ மன் தஷாஉ இலா ஸி(ص)ராதிம் முஸ்தகீம்

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1847

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

13-B

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே!
வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே!
மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே!
நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து (மறுமையில்) தீர்ப்பு வழங்குவாய்.
(பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்திய (மார்க்க)த்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.

குறிப்பு: அபூ ஸலாம் இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம் நபியவர்கள் இரவுத் தொழுகைக்காக எழுந்தால் எதைக் கொண்டு இரவுத் தொழுகையை ஆரம்பிப்பார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த துஆவைக் கொண்டு என பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், முஸ்லிம் 1847

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள் 14-A

## ஸய்யிதுல் இஸ்திஃபார்

اَللَّهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ وَأَنَا عَلَى عَهْدِكَ
وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ أَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ
وَأَبُوْءُ بِذَنْبِيْ فَاغْفِرْ لِيْ فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ.

அல்லாஹும்ம அந்த ரப்பீ. லா இலாஹ
இல்லா அந்த. க(خ)லக்தனி.
வ அன அப்துக. வ அன அலா அஹ்திக, வ வஃதிக மஸ்ததஃது.
அஊது பிக மின் ஷர்ரி மா ஸ(ص)னஃது. அபூஉ லக பி நிஃமத்திக
அலய்ய, வ அபூஉ பிதன் பீ, ப(ف)க்பி(ف)ர்லீ. ப(ف)இன்னஹு
லா யக்(غ)பிருத் துனூப இல்லா அந்த

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், புகாரி 6306

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

14-B

## ஸய்யிதுல் இஸ்திஃபார்

அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை, நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.

குறிப்பு

நபி (ﷺ) அவர்கள் கூறியதாக ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

யார் இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறந்துவிடுகிறாரோ அவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். யார் இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறாரோ அவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்.

அறிவிப்பாளர்: ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்கள், புகாரி 6306

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

15-A

اللَّهُمَّ بِعِلْمِكَ الْغَيْبَ، وَقُدْرَتِكَ عَلَى الْخَلْقِ، أَحْيِنِي مَا عَلِمْتَ الْحَيَاةَ خَيْرًا لِي، وَتَوَفَّنِي إِذَا عَلِمْتَ الْوَفَاةَ خَيْرًا لِي، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَشْيَتَكَ فِي الْغَيْبِ وَالشَّهَادَةِ، وَأَسْأَلُكَ كَلِمَةَ الْحَقِّ فِي الرِّضَا وَالْغَضَبِ، وَأَسْأَلُكَ الْقَصْدَ فِي الْغِنَى وَالْفَقْرِ، وَأَسْأَلُكَ نَعِيمًا لَا يَنْفَدُ، وَأَسْأَلُكَ قُرَّةَ عَيْنٍ لَا تَنْقَطِعُ، وَأَسْأَلُكَ الرِّضَا بَعْدَ الْقَضَاءِ، وَأَسْأَلُكَ بَرْدَ الْعَيْشِ بَعْدَ الْمَوْتِ، وَأَسْأَلُكَ لَذَّةَ النَّظَرِ إِلَى وَجْهِكَ، وَالشَّوْقَ إِلَى لِقَائِكَ، فِي غَيْرِ ضَرَّاءَ مُضِرَّةٍ، وَلَا فِتْنَةٍ مُضِلَّةٍ، اللَّهُمَّ زَيِّنَّا بِزِينَةِ الْإِيمَانِ، وَاجْعَلْنَا هُدَاةً مُهْتَدِينَ

அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அவர்கள், நூல்: நஸயீ 1288

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

15-B

அல்லாஹும்ம பி இல்மிகல் கை(غ)ப வ குத்ரத்திக அலல் க(خ)ல்கி, அஹ்யினி மாஅலிம்தல் ஹயாத கை(خ)ரன்லீ வதவப்(ف)பனீ இதா அலிம்தல் வபா(ف)த கை(خ)ரன்லீ அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக க(خ)ஷ்யதக பி(ف)ல் கை(غ)பி வஷ்ஷஹாததீ. வஅஸ்அலுக கலிமதல் ஹக்கி பி(ف)ர்ரிளா(ض) வல் க(غ)ள(ض)பி வஅஸ்அலுகல் கஸ்(ص)த பி(ف)ல்கி(غ)னா வல்ப(ف)க்ரி வஅஸ்அலுக நயீமன் லாயன்ப(ف)து அ வஅஸ்அலுக குர்ரத அய்னின் லா தன்கதிஃ வ அஸ்அலுகர் ரிளா(ض)அ பஃதல் களா(ض)யி வ அஸ்அலுக பர்தல் அய்ஷி பஃதல் மவ்தி வ அஸ்அலுக லத்தத்தன் நள்(ظ)ளரி இலா வஜ்ஹிக வஷ்ஷவ்க இலா லிகாயிக பீ(ف) கை(غ)ரி ள(ض)ர்ராஅ முளி(ض)ர்ர(த்)தின் வலா பி(ف)த்னதின் முளி(ض)ல்ல(த்)தின் அல்லாஹும்ம ஸ(ز)ய்யின்னா பி ஸீ(ز)னத்தில் ஈமானி வஜ்அல்னா ஹுதாத்தன் முஹ்ததீன்

அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அவர்கள், நூல்: நஸயீ 1288

# மார்க்கப்பற்றுடன் வாழ்வதற்கான துஆக்கள்

15-C

யா அல்லாஹ்! மறைவானதைப் பற்றிய உன்னுடைய அறிவினால் மற்றும் படைப்பினங்களின் மீதுள்ள ஆற்றலினால், வாழ்வது எனக்கு நன்மையாக இருக்குமென நீ அறிந்திருப்பின் என்னன வாழவைப்பாயாக! மேலும், மரணிப்பது எனக்கு மிகச்சிறந்ததாக நீ அறிந்திருந்தால், என்னை மரணிக்கச் செய்வாயாக! யா அல்லாஹ்! மறைவிலும், வெளிப்படையிலும் உன்னுடைய பயத்தை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கிறேன். பொருத்தத்திலும், கோபத்திலும் உண்மையான வார்த்தையை (நான் கூற நல் உதவி நல்கிட) உன்னிடம் நான் கேட்கிறேன். செல்வத்திலும், வறுமையிலும் நிதானத்தை உன்னிடம் நான் கேட்கிறேன். முடிவில்லாத அருட்கொடையையும் உன்னிடம் நான் கேட்கிறேன்; துண்டித்து விடாத கண்குளிர்ச்சியையும் உன்னிடம் நான் கேட்கிறேன். உனது தீர்ப்பிற்குப் பிறகு பொருந்திக் கொள்வதையும் உன்னிடம் நான் கேட்கிறேன். மரணத்திற்குப் பிறகு குளிர்ச்சியான வாழ்வையும் உன்னிடம் நான் கேட்கிறேன். உன்னுடைய முகத்தைப் பார்க்கின்ற இன்பத்தையும், இடரு செய்யும் இடரின்றி மற்றும் வழி கெடுத்து விடக்கூடிய குழப்பமுமின்றி உன்னுடைய சந்திப்பின் பால் பேரார்வத்தையும் உன்னிடம் நான் கேடகிறேன். யா அல்லாஹ்! ஈமானுடைய அழகினால் எங்களை அலங்கரிப்பாயாக! இன்னும் நேர்வழியுடையோராக நேர்வழி பெற்றவராக எங்களை நீ ஆக்குவாயாக!

குறிப்பு

இந்தத் துஆ தொழுகையின் இறுதி இருப்பில் ஸலாம் கொடுப்பதற்கு முன் ஓத வேண்டிய துஆக்களில் ஒன்றாகும்.

அறிவிப்பாளர்: அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அவர்கள், நூல்: நஸயீ 1288